# மரக்காணம் பேரூராட்சி

## (விழுப்புரம் மாவட்டம்)

நக.எண்.அ1/117/2021 நாள்: 23.08.2021

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் பேரூராட்சியில் காலியாக உள்ள அரசு நிலையாக்கப்படாத ஒரு அலுவலக உதவியாளர் மற்றும் ஒரு தூய்மை பணியாளர் பணியிடத்திற்கு விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு உதவி இயக்குநர் அவர்களின் பட்டியல் X2/26/2021 நாள். 12.08.2021 மற்றும் X2/27/2021 நாள்.13.08.2021 படி தகுதியான நபர்களிடமிருந்து 09.09.2021ம் தேதிக்குள் செயல் அலுவலர், மரக்காணம் பேரூராட்சி என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெறும் விண்ணப்பங்களில் தகுதியான நபர்களுக்கு மட்டும் எதிர்வரும் 14.09.2021 அன்று முற்பகல் 10.00 மணியளவில் நேர்காணல் நடத்தப்படும் என அறிவிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியிடத்தின் விவரம் | ஒதுக்கீடு | காலியிட எண்ணிக்கை | கல்வி தகுதி |
|---|---|---|---|---|
| 1 | அலுவலக உதவியாளர் | பொது (General Turn Non Priority) | 1 | 8ம் வகுப்பு தேர்ச்சி |
| 2 | தூய்மை பணியாளர் | பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம் (Backward Class Muslim) | 1 | எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும் |

வயது: 01.09.2021 (அன்றுள்ளபடி) அரசாணை (நிலை) எண்.21 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்.02.02.2000ன் படி பள்ளி இறுதி வகுப்பிற்கு குறைவான கல்வித்தகுதியுடைய பதிவுதாரர்கள் தாங்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த பதிவு மூப்பில் மூன்றாண்டுக்கு ஒரு ஆண்டு வீதம் அதிகபட்சம் ஐந்தாண்டுகள் வரை உச்ச வயது வரம்பில் தளர்வு பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

மேற்படி பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 09.09.2021ம் தேதிக்குள் செயல் அலுவலர், மரக்காணம் பேரூராட்சி என்ற முகவரிக்கு பதிவஞ்சல் வாயிலாக விண்ணப்பம் கிடைக்கப்பெற வேண்டும்.

## நிபந்தனைகள்

1. விண்ணப்பங்கள் பதிவஞ்சலில் மட்டுமே அனுப்பி வைக்கப்பட வேண்டும். நேரில் அளிக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
2. நிர்ணயிக்கப்பட்ட நாளில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு நேர்காணல் குறித்த விவரம் பதிவஞ்சல் வாயிலாக தெரிவிக்கப்படும்.

(ஒம்) திரு. **ஆ.மயில்வாகனன்**
செயல் அலுவலர்
மரக்காணம் பேரூராட்சி
விழுப்புரம் மாவட்டம்.

(ஒம்) திரு. **எஸ்.தெய்வீகன்**
தனி அலுவலர்
மரக்காணம் பேரூராட்சி மற்றும்
செயல் அலுவலர்
கோட்டக்குப்பம் பேரூராட்சி.

வெ.ஆ.எண்.46/விளம்பரம்/செமதொ.அ/விழுப்புரம்/2021 நாள்: 25.08.2021